# பாதுகாப்பான டிஜிட்டல் வங்கிச் சேவை அனுபவத்திற்கான நல்ல நடைமுறைகள்

நிதியியல் கல்வி வாரம்
ஜூன் 4-8, 2018

## செய்யவேண்டியவை / செய்யக்கூடாதவை

### ஆன்லைன் மற்றும் மொபைல் பேங்கிங்

**செய்யவேண்டியவை**



- சோதித்தறியப்பட்ட நம்பகமான உலாவிகளை (ப்ரௌஸர்) மட்டுமே உபயோகிக்கவும். HTTPS பாதுகாப்புடன் கூடிய இணையதளங்களைப் பணம் செலுத்தும் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தவும்.
- கடவுச் சொல்லை (பாஸ்வோர்டை) அடிக்கடி மாற்றுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- பணம் செலுத்தும் செயலிகளை அவ்வப்போது புதுப்பித்து, சமீபத்திய பதிவில் வைத்திருக்கவும்.

**செய்யக்கூடாதவை**



- உங்களின் நுழைவுத் தகவல்களை போனில் வைத்திருக்க வேண்டாம். நம்பத்தக்க வகையில் இல்லாத பொது கணினி அல்லது முகப்புகளில் முக்கியத் தகவல்களைப் பதிய செய்யவேண்டாம்.
- பொது இடங்களிலுள்ள சாதனங்கள் பாதுகாப்பற்ற / திறந்த வலைதள வசதிகளை உபயோகித்துப் பரிவர்த்தனைகள் செய்யவேண்டாம்.
- மொபைல் பேங்கிங் ‘பின்’ அல்லது இணைய வங்கிச் சேவை (பாஸ்வோர்டை) கடவுச் சொல்லை யாருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

### ஒருங்கிணைக்கப்பட்ட பணப் பரிமாற்ற இடைமுகம் (UPI)/BHIM

**செய்யவேண்டியவை**




- குறிக்கப்பட்ட பயனாளிகளுக்கு மட்டுமே பணம் அனுப்பப்படுவதை உறுதி செய்திடுங்கள்.
- பணத்தை அனுப்பும்போது, பெறுபவரின் கோரிக்கை தகவல்களையும், தொகையையும் சரிபார்த்து சரியான பயனாளிக்கு பணத்தை அனுப்பவும்.

**செய்யக்கூடாதவை**



- UPI பின் எண்ணை எழுதி வைக்காதீர்கள். யாரிடமும் சொல்லாதீர்கள்.
- பணத்தைப் பெறும் நபரின் தகவல்களை முதலில் சரி பார்க்காமல், பணப்பரிமாற்றத்தில் ஈடுபடாதீர்கள்.



### கடன் மற்றும் பற்று அட்டை

**செய்யவேண்டியவை**



- பயன்படுத்தும்போது அட்டை மீது எப்போதும் கவனம் செலுத்துங்கள். உடனடியாக அட்டையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- பரிவர்த்தனை குறித்த குறுஞ்செய்தியில் உள்ள தகவல்களுக்கும் நிகழ்ந்த பாவத்தனைக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா என்று எப்போதும் சோதித்தறியுங்கள்.
- உங்கள் அட்டைகுறித்த பரிவர்த்தனை ரசீதுகள், அறிக்கைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பான முறையில் அகற்றிடுங்கள்.

**செய்யக்கூடாதவை**



- அட்டை குறித்த விவரங்கள் மற்றும் பின் எண்ணை எவருடனும் பகிர்ந்துகொள்வதைத் தவிர்த்திடுங்கள்.
- உங்கள் கடன், பற்று அட்டையை எவரிடமும் கொடுக்காதீர்கள்.
- உங்கள் கடவுச் சொல் /OTP/பின் ஆகியவற்றை எவரிடமும் சொல்லாதீர்கள்.

நிதி கல்வியறிவு • வளமைக்கு வழி

# நல்ல நடைமுறைகள்

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை
இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in